**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**

**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04–ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**CC.No.79/2026**

**CNR.NO. TNVL – 24–001271–2026**

அரசுக்காக காவல் ஆய்வாளர் மூலமாக,

திருவலம் காவல் நிலையம்,

குற்றஎண்.61/2026

U/s.4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT

……………..குற்றமுறையீட்டாளர்

// எதிர்//

கோபால் த/பெ. கிருஷ்ணன்,

நெ.75 பிள்ளையார் கோயில் தெரு,

செட்டிந்தாங்கல் கிராமம்,

செட்டிந்தாங்கல், வாலாஜா தாலுக்கா,

இராணிப்பேட்டை மாவட்டம்.

……………..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

| Sl No | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர்பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருவலம் காவல் நிலையம்,<br>குற்றஎண்.61/2026<br>U/s.4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT | கோபால் | கிருஷ்ணன், | -- | நெ.75 பிள்ளையார் கோயில் தெரு,<br>செட்டிந்தாங்கல் கிராமம்,<br>செட்டிந்தாங்கல், வாலாஜா தாலுக்கா,<br>இராணிப்பேட்டை மாவட்டம். | 63 |

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.08.04 19:26:40 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்குஅனுப்பி வைத்தது | வழக்கு விசாரணை ஆரம்ப நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளிகள் மீதான தீர்ப்புரைக் குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | கால தாழ்விற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 19.04.2026 | 19.04.2026 | -- | -- | -- | 24.06.2026 | 16.07.26 | 04.08.2026 | -- | NO DELAY |

இவ்வழக்கானது 11.06.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு தன் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பாலாஜி, S.டெய்சி அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1) கடந்த 19.04.2026 ம் தேதி மாலை 17.00 மணிக்கு திருவலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பொன்னை கூட்ரோட்டிடம் இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரி அரசு அனுமதியின்றி தனது TN 05 AT 2298– HONDA ACCENT இருசக்கர வாகனத்தில் தலா 180 ML அளவு கொண்ட 1) GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள் 2) MCLONE BRANDY 17 பாட்டில்கள் 3) MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 மதுபாட்டில்களை கூடுதல் விலைக்கு விற்பனைக்காக வைத்திருந்தது பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP Amendment ACT2024 ன் படி குற்றம் என திருவலம் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணநகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா பிரிவு 230–ன்கீழ் இலவசமாக வழங்கப்பட்டு அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

3. பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரிகள் மீது பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT ன் கீழ் குற்றச்சாட்டுகள்

வனைந்து குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தை பொய் என மறுத்துரைத்தனர். எனவே அரசுதரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்படுகிறது.

5. **அரசுதரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு**

அ) அ.சா.1 செந்தில்குமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது திருவலம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 19.04.2026 ம் தேதி மேற்படி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மாலை 17.00 மணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், சிறப்பு உதவி ஆய்வாளர் மணவாளன் மற்றும் தானும் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று

கொண்டிருந்தவர் போலிசாராகிய தங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க கோபால், த/பெ. கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள் 2) MCLONE BRANDY 17 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில்

இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2 மணவாளன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது திருவலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 19.04.2026 ம் தேதி மாலை 17.00 மணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், தலைமை காவலர் செந்தில்குமார் மற்றும் தானும் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய தங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க கோபால், த/பெ.

கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 4, 2) MCLONE BRANDY 17, 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 மஞ்சுநாதன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது திருவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 19.04.2026 ம் தேதி மாலை 17.00 மணிக்கு தானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மணவாளன் மற்றும் தலைமை காவலர் செந்தில்குமார் ஆகியோர் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய தங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க கோபால், த/பெ. கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள். 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான

கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். மேற்படி நபரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி மாலை 17.15 மணிக்கு கைது செய்து பின்னர் சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் என்னுடன் இருந்த போலிசார் முன்னிலையில் மாலை 17.30 மணிக்கு தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள். 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்துகள் மற்றும் எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரியின் மீது வழக்கின் தன்மைபடி நிலைய குற்ற எண் 61/2026, சட்டப்பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT ன் படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையை கணம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரியை பிணையில் விடுவித்தேன். பின்னர் வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். எதிரியை பிணையில் விடுவித்தேன். அந்த படிவம்

–91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1). GOLDEN EAGLE DOCTOR BRANDY 180 மிலி அளவு கொண்டது.–10 பாட்டில்கள் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. MCLONE BRANDY 180 மிலி அளவு கொண்டது –17 பாட்டில்கள் அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. MONITOR GOLD RUM 180 மிலி அளவு கொண்ட –4 பாட்டில்கள் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் தனது புலன்விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT ன் படி19.04.2026 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

6) இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.3 அரசுதரப்பு சாட்சிகள் எதிரிக்கு பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவ எதிரி அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தனர். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினர். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. <u>தீர்வுக்குரியபிரச்சனை</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசுதரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம்

சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.

8).இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 104 ன்படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொறுப்பு அரசுதரப்பை சார்ந்ததாகும்.

9) அரசுதரப்பில் எதிரிக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடுசெய்து, எதிரிக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

10) எதிரி தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தங்களுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்றசம்பவத்தை பொறுத்து தங்கள் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

11) அ.சா.1 மற்றும் அ.சா.2 இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் ஆவார். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 19.04.2026 ம் தேதி மேற்படி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மாலை 17.00 மணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன்,

சிறப்பு உதவி ஆய்வாளர் மணவாளன் மற்றும் தானும் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு மதுவிலக்கு. கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய தங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க கோபால், த/பெ. கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள் 2) MCLONE BRANDY 17 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள், 2)MCLONE

BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 19.04.2026 ம் தேதி மாலை 17.00 மணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன். தலைமை காவலர் செந்தில்குமார் மற்றும் நானும் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய எங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க

கோபால், த/பெ. கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 4, 2) MCLONE BRANDY 17, 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180 மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். .பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.3 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கை எடுத்துக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததை பற்றியும், அழிப்பு மகஜர் தயார் செய்ததை பற்றியும் முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததை பற்றியும், சாட்சியம் அளித்துள்ளார். இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும். அவரது சாட்சியம் புலன் விசாரணை சார்ந்தது ஆகும். எதிரிகளை இவ்வழக்கோடு தொடர்புபடுத்த அரசுத்தரப்பில் வேறு எந்தவொரு சாட்சியும் முன்னிலைபடுத்தவில்லை.

13) மேற்படி வழக்கில் பொதுநபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்கள் ஒரே காவல் நிலையத்தில் பணிபுரியும் நபர்கள் ஆவார்கள். அவர்கள் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் மேற்படி குற்றத்தை செய்திருப்பார் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வர முடியாது.

14) மேற்படி வழக்கில் அனைத்து செயல்முறைகளும் சட்டப்படி பின்னபற்றபட்டதா என்று நீதிமன்றம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சட்டப்பிரிவு 32 TNP AMENDMENT ACT-ன் படி மதுபானத்தை ஆய்வாளர் அல்லது Prohibition Officer முன்னிலையில் தான் மாதிரி எடுத்து மீதமுள்ள மதுவை ஆய்வாளர் அல்லது Prohibition Officer

**முன்னிலையில் அழித்து எடுத்த மாதிரி நீதிமனறத்திற்கு அனுப்ப வேண்டும்.**

15) The Hon'ble High Court of Madras in Selvi vs State has held that

*"A close reading of the above third proviso to Section 32 (c) of the Tamil Nadu Prohibition Act would make it abundantly clear that the officer who has seized the illicit arrack can draw samples only in the presence of a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police and then he can destroy the remaining contraband. In respect of the destruction, the said prohibition officer or police officer, in whose presence the destruction is done, should give a certificate in respect of the total quantity seized, the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be forwarded to the Magistrate having jurisdiction. But, in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police. It may be true that*

*P.W.8 himself is an Inspector of Police but that by itself will not satisfy the requirements of the above provision. Here, we have to look into the object behind the said proviso. In a case where the officer, who seizes illicit arrack, decides to destroy the same after drawing samples, in order to ensure that samples were really taken from the illicit arrack seized and that the rest of the illicit arrack was destroyed, the presence of yet another responsible officer namely, a prohibition officer or any police officer not below the rank of Inspector is insisted upon. This procedure, in my considered opinion, is mandatory as the object behind the same is to ensure that there is no manipulation at the hands of the officer who seizes the*

*illicit arrack.”*

*16)* The Hon’ble High Court of Madras in Senthil Prabhu vs State has held that

*"In the considered view of this Court, a police officer, who seizes illicit arrack must draw the samples only in the presence of a prohibition officer or any police officer not below the rank of Inspector of Police and destroy the remaining contraband. This procedure is mandatory since the object behind the same is to ensure that there is no mainpulation at the hands of the police officer who seizes the illicit arrack. The issue is squarely covered by the earlier judgment of this Court in (Selvi Vs State represented by Inspector of Police, Rasipuram Police Station, Namakkal District) reported in 2011(2) MWN (Crl.) 623."*

17) மேற்கண்ட வழக்கில் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் என்ற அடிப்படையிலும், மேற்கண்ட உயர் நீதிமன்ற வழிகாட்டு நெறிமுறைகளை சரியாக பின்பற்றபடவில்லை என்றும், ஆய்வாளர் அல்லது Prohibition Officer முன்னிலையில் மாதிரி எதுவும் எடுக்காமல் உதவி ஆய்வாளர் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே மொத்த வழக்கு சொத்தையும் அழித்ததால் எந்த மாதிரியும் எடுக்காததால் பிரிவு 32 TNP ACT –ன் படி இந்த வழக்கின் விசாரணை அதிகாரி முறையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றததால் அந்த பலனை எதிரிகளுக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18) எனவே இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரை சாட்சியமாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT–ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை, எனவே எதிரி மேற்படி பிரிவுகளின் கீழான குற்றத்தில் குற்றவாளிகள் என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுதரப்பில் நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>19) முடிவாக</u>**

i) எதிரிக்கு எதிரான பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP AMENDMENT ACT–ன் கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியின் சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என முடிவுசெய்து பாரதிய நாகரிக் சுரக்க்ஷா சன்ஹிதா 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**20)<u>சொத்து பற்றிய ஆணை</u>**

இவ்வழக்கில் சி.பி.எண்.104/2026 கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் வழக்குச் சொத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்தான 31 பாட்டில்கள்

மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழித்திட உத்தரவிடப்படுகிறது.

**அ.சா.பொ.1 –** TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் – ஒன்று.

**அ.சா.பொ.2–**GOLDEN EAGLE DOCTOR BRANDY 180 மிலி அளவு கொண்டது.– 10 பாட்டில்கள்

**அ.சா.பொ.3–** MCLONE BRANDY 180 மிலி அளவு கொண்டது –17 பாட்டில்கள்

**அ.சா.பொ.4–** MONITOR GOLD RUM 180 மிலி அளவு கொண்ட –4 பாட்டில்கள்

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.08.04 19:26:59 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | செந்தில்குமார் |
| அ.சா.2 | மணவாளன் |
| அ.சா.3 | மஞ்சுநாதன் (விசாரணை அதிகாரி) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவண விபரம் |
|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ,3 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | படிவம்–91 |

எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

**சான்று பொருள்**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் – ஒன்று. |
| அ.சா.பொ.2 | GOLDEN EAGLE DOCTOR BRANDY 180 மிலி அளவு கொண்டது.–10 பாட்டில்கள் |
| அ.சா.பொ.3 | MCLONE BRANDY 180 மிலி அளவு கொண்டது –17 பாட்டில்கள் |
| அ.சா.பொ.4 | MONITOR GOLD RUM 180 மிலி அளவு கொண்டது –4 பாட்டில்கள் |

**குறிப்பு**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல்நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
3. விசாரணை காலத்தில் எதிரிகள் காவல்நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.08.04 19:27:08 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.